௨

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு.

துணர் ௰௨. { தாது, புரட்டாசி } மலர் ௬

௧. திருவிளையாடற் புராணவாராய்ச்சி 193
திரு. E. R. நரசிம்மஐயங்கார் அவர்கள் B.,A. B.L.,

௨. திருக்குறணுதலிய நெறிமுறை 201
திரு. K. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் B.A., B.L.,

௩. மகாபலிபுரத்தின் பண்டையப் பெயர் 209
திரு. C M. இராமச்சந்திரசெட்டியாரவர்கள் B.A.,B.L.,

௪. காலவாராய்ச்சி 214
திரு. கோமான். ம. வி. இராகவன் அவர்கள்

௫. தமிழ்ச்செய்திகள் 223

௬. நன்கொடைகள் 227—228
பொழிற்றொண்டர்

௭. சித்தரந்தாதி 5—12
திரு. L. உலகநாதபிள்ளை அவர்கள்.

செந்தமிழ்ப்புரவலர்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௰௨	தாது, புரட்டாசி	மலர் ௬

உ

திருவிளையாடற் புராண வாராய்ச்சி

E. R. நரசிம்ம ஐயங்கார் அவர்கள் B.A., B.L., சேலம்.

திருவிளையாடற் புராணமெனப் பெயரிய நூல்களிரண்டனுள் பெரும்பற்றப்புலியூர் நம்பியார் இயற்றிய நூலொன்றே ஆராயப்பட்டதாகும். புறச்சான்றின் ஆதாரவைக்கொண்டு இந்நூல் தொன்மை வாய்ந்ததெனப் புலவர் திலகம் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் சாற்றினர். இதனால் மற்றை நூலாகிய பரஞ்சோதி முனிவர் இயற்றியநூல் பிற்பட்டதெனப் பெறப்படாதாயினும் அறிஞரனைவரும் இதனை மிகவும் பிற்பட்டதெனவே கருதுவர். இக்கருத்துடையார் சான்று ஒன்றும் பகரவில்லை. இவ்விரு நூல்களினும் அகச்சான்றுகள் ஒன்றும் இன்றென்பதே அறிஞர்களனைவரும் ஒப்ப முடிந்ததொரு கொள்கை

யாகும். அன்றியும் இவ்விரு நூல்களின் காலமும் வரையறுத்துக் கூறப்படவில்லை. இந்நூல்களில் அகச்சான்றுகள் உளவென்பதையும் அவற்றால் இவ்விரு நூல்களின் காலங்களை வரையறுத்துக் கூற வியலுமென்பதையும் ஈண்டுக் காட்ட முயலுவாம்.

பெரும்பற்றப் புலியூர் நம்பியார் இயற்றியுள்ள புராணம் ஏட்டிலே குடிபுகுந்து கரந்துறைந்து இறந்தொழியுந் தருவாயிலிருந்தது. இதனை டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் அரிதிற்றேடி எடுத்து ஓரரிய குறிப்புரையும் வரைந்து, அச்சுவாகனமேற்றி என்றும் பொன்றாப்புகழைப் படைத்துக்கொண்டனர். இலக்கியங்களைத் துருவியாராய்ந்து ஓரின்றியமையா ஆராய்ச்சி யுரையையும் இப்பெருந்தகையார் தந்துள்ளதற்குத் தமிழுலகு என்றும் கடப்பாடுடையதாகும். நான்மாடக் கூடலான திருவிளையாடலில் மதுரை மாநகருக்கு மாடக் குளக்கீழ் என்னும் ஓர் அடைகொடுத்துப் புலவர் கூறியுள்ளார்.

கொண்மூ மாடங்கள் கூடலின் மீறிய
நண்ணி நீள்கடங் கொள்ளா நகரிதன்
மண்ணின் மாடக் குளக்கீழ் மதுரையென்
றெண்ணில் காலத் திலங்கிய தெங்கணும்

என்னும் செய்யுளில் கூறப்பட்ட மாடக் குளக்கீழ் மதுரை என்பதின் காரணத்தை ஆராய்வாம். இலக்கியங்களில் திருமருதப் பெருந்துறை, குடகூடல், நான்மாடக்கூடல் முதலிய பெயர்கள் மதுரையின் மறுபெயர்களாக வழங்கப்பட்டுள்ளன. இப்புலவர் தமது நூலில் திருவிளையாடல்கள் நிகழ்ந்த ஊர், நாடு, மலை முதலியவற்றைக் குறிக்கும்போது அவற்றினுக்கோர் அழகூட்டிக் கூறும் திறமை வாய்ந்தவர் என்பதை அறிஞர் அறிவர். இச்செய்யுளிலும் புலவர்பெருமான் மதுரை நகரின் மேலொரு கற்பனையையேற்றிக் கூறப்புகுந்தனரோவென்னும் ஆசங்கைக்குச் சாசனச் சான்றுகள் இடங்கொடா. இப்பெயர் பாண்டிய மன்னர் சாசனங்களில் காணப்படுங் குறிப்பால் பாண்டிய மன்னர் காலங்களை வரையறுப்பதற்கு இப்பெயரை ஓர் கருவியாக திரு. நீலகண்டசாஸ்திரியாரவர்கள் தமது பாண்டிய சரித்

திரத்தில் கொண்டுள்ளார். இச்செய்யுளை இப்பேராசிரியர் அறிந்தவராயின் இந்நூல் 13-ம் நூற்றாண்டிற்கு முன்னதாகு மென்று கூறியிருக்கமாட்டார் என்பது திண்ணம். ஆயினும் இப்பேராசிரியர் நம்பியார் புராணம் 13-ம் நூற்றாண்டிற்கும் முற்பட்டதெனக் கூறியுள்ளது அறியாது கூறினராகல்வேண்டும். இப்பெயர் தோன்றியதன் காரணம் அறியவியலாதென்று இப் பேராசிரியர் கூறிவிட்டாரேனும் இப்பெயர் தோன்றிய காரணத்தை அக்கால அரசியல்நிலை யொருவாறுணர்த்துவதைக் காட்டுவாம்.

பாண்டிய மன்னர் இருவர் தம்முட் பகை பாராட்டி பன்னிரண்டாம் நூற்றாண்டினிடைக்காலம் முதல் இறுதி வரையிலும் கடும்போர் புரிந்து வந்தனர். இருவரும் வெற்றியும் தோல்வியும் மாறிமாறி யடைந்துவந்தனர். இக்கொடிய போரின் நிகழ்ச்சிகளையறிந்த சோழநாட்டிலுள்ளாரும் திடுக்கிட்டு நடுங்கும்படியாக விருந்ததெனக் காஞ்சீபுரத்துக்கடுத்த ஆரம்பாக்கத்துச் சாசனம் புகலுவதைக் காண்க. (சோழ சரித்திரம் பக்கம் 40). இப்போர் கொங்கு நாட்டிலும் பரவியிருந்ததென்பதற்குச்சான்றாக கொங்கு மன்னனொருவன் கொழுமங்கொண்ட சோழன் என்னும் பட்டத்தை பூண்டுள்ளதைக் காண்க. இம் மன்னன் குலசேகர பாண்டியனுக்கு மாமன் என்று கூறிக் கொள்ளுகிறான். இக்கொடும்போர் நிகழுங்காலையில் மதுரை நகரும் தகர்ப்புண்டது போலும். இப்போர் முடிவுற்றது கி. பி. 1190 ஆண்டின்முன் என்னலாம். இப்போரில் வெற்றி யடைந்த மற்றொரு குலசேகரன் அரியணை யேறினான். இவன் காலம் முதல் நாடு அமைதி பெற்றது. இவ்வரசன் மதுரைமா நகரைப் புதிப்பித்தான், என்னலாம். மதுரை நகர் புதியவிடத்தில் அமைக்கப்பட்டதென்பதற்கு ஐயரவர்கள் "மாநகரி என்பது மதுரைக்கு வடகிழக்கிலுள்ளது; பாண்டிய மன்னர்களுடைய அரண்மனை முதலியன இருந்தவிடம்" என்றும் "பழமதுரை இஃது இப்போதுள்ள மதுரைப் பதிக்குக் கிழக்கே யிருந்ததாகத் தெரிகின்றது" பழமதுரைமேடென்ற ஓரிடமும் பழமதுரைமுனியென்ற ஓர் முனியின் கோயிலும் அங்கே

யுண்டு என்றும் கூறியுள்ளதோர் சான்ருகும். இஃதன்றியும் இக்காலம் முதல் அரசன் திருவோலக்க மண்டபம் "புகழாபரணன் மண்டபம்" எனவும் வழங்கியுளதால் இம்மண்டபம் ஓர் குறுநில மன்னனுல் கட்டப்பட்டு அவன் பெயரும் இடப்பட்டுள்ளதென்பதை யறியலாகும். மதுரைமாநகர் அமைக்கப் பட்டபோது ஓர் புதிய குளங்தொட்டு அதனருகே அரசன் கோயிலும் அமைக்கப்பட்டது போலும். இதனை யக்கால மன்னர் வெற்றிக் கறிகுறியாக தமது சாசனங்களில் கூறிக் கொண்டாரெனலாம். புலவர் இவ்வகையோர் நிகழ்ச்சியைத் தமது நூலினும் குறித்தார்போலும். இச்சிறப்பைப் புலவர் சிறிது விரித்துக் கூருதது நமது துர்ப்பாக்கியமாகும். இப் பெயர் புலவர் திகழ்ந்த பலவாண்டுகளுக்கு முன்னரே எழுந்த தென்பதை உபசாரமாக "எண்ணில் காலத் திலங்கிய தெங் கணும்" என்று கூறிஞராவர்.

இனி இப்பெயர் காணப்படும் சிலசாசனங்களைக் கூறுவாம். திருநெல்வேலி தாலுக்கா சுத்தமல்லி யென்னுமூரில் உள்ள முதல் சடாவர்மகுலசேகரன் ஆட்சியில் 14ம்ஆண்டுக் கல்வெட்டு ஒன்றில் (459-1909) அரசன் மாடக் குளக்கீழ் மதுரையில் புகழா பரணன் என்னும் கூடத்தில் வீற்றிருந்தபோது ஓர் நிலம் தானமாகக் கொடுத்ததாகக் கூறப்பட்டுளது. புகழா பரணன் என்பது ஓர் குறுநிலமன்னன் பெயராகும். இவ்வரசனுக்கு இம் மன்னன் இன்றியமையாத் துணைவனுயிருந்தான்போலும். இவ் வரசன் கி. பி. 1190 முதல் 1216 வரையில் ஆட்சி புரிந்தா ஞதலின் கல்வெட்டு கி. பி. 1204ல் பொறிக்கப் பட்டதாகும்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலுக்கா புதுப்பாளையம் என்னும் ஊரில் முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சியில் 11-ம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றில் (504—1909) திருவாரூர் கோளகைமடத்து ஈசான தேவருக்கு சில நிலங்கள் அளிக்கப் பட்டதாக் கூறப்பட்டுளது. அக்காலத்தில் மன்னன் மாடக்குளக்கீழ் மதுரையில் மழவராயன் என்னும் சிங்காதனத் தில் வீற்றிருந்ததாகத் தெரிகிறது. இங்கு மழவராயன் என் னும் பெயர் ஓர் குறுநில மன்னனைக் குறிக்கும். இவ்வரசன்

கி. பி. 1216 முதல் 1239 வரையில் செங்கோலோச்சினனாதலின் கல்வெட்டு கி. பி. 1227ல் பொறிக்கப்பட்டதாகும்.

இப்பாண்டிய மன்னரின் முன்னோர் காலத்துச் சாசனங்களில் இப்பெயர் வந்திலது. எனவே இப்பெயர் ஆட்சிக்கு வந்தது 13ம் நூற்றாண்டின் தொடக்கத்திலென்னலாம். நம்பியார் தமது காலத்திற்கு பலவாண்டுகள் முன்னரே இப்பெயர் எழுந்ததென்று கூறியுள்ளாராதலின், புலவர் பெருமான் 13ம் நூற்றாண்டிறுதியில் திகழ்ந்தவரெனக் கூறலாகும். இக்கருத்து வேறு சாசனங்களால் வலியுறுவதைக் காட்டுவாம்.

திருப்புல்லாணியில் உள்ள முதல் மாறவர்மன் குலசேகரன் ஆட்சியில் 36-ம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றில் (131—1908) அரசனுடைய அதிகாரிகளில் ஒருவனான வள்ளுவநாடாள்வான் பெரும்பற்றுப்புலியூர் நம்பியாருக்கு அளிக்கப்பட்ட நிலங்களைக் கவர்ந்து கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது. இம்மன்னன் கி.பி. 1268முதல் 1306 வரையில் ஆட்சிபுரிந்தானாதலின் இக்கல்வெட்டின் காலம் 1304ம் ஆண்டாகும். இம்மன்னன் ஆட்சியில் திருப்புத்தூரிலுள்ள மற்றோர் கல்வெட்டில் அவ்வூர் சிவபிரான் கோயிலுக்குப் பெரும்பற்றபுலியூர் நம்பியார் நிலம் தானம் செய்ததாகக் காணப்படும். இவ்விரு கல்வெட்டுகளிலும் குறிக்கப்பட்ட பெயர் நம் புலவரைச் சுட்டியதாகுமென்பது இழுக்காகாது. எனவே நம்புலவர் 13ம் நூற்றாண்டின் இறுதியிலும் 14ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இருந்தவர் என்பது தோற்றமாம்.

மதுரைத் திருப்பணி மாலையிலும் மதுரைக் கோயிலொழுகிலும் கூறப்பட்ட ஆனந்ததாண்டவ நம்பியார் கி. பி. 1228க்கு முன்னரிருந்தவராவர். நமது புலவர் இந்நூற்றாண்டிறுதியில் திகழ்ந்தவராவர். இவர்களுக்கிடையில் 60 ஆண்டுகள் சென்றிருத்தல் வேண்டுமென்பது வெளிப்படை. நம் புலவர் ஆனந்த தாண்டவநம்பிகளுக்கு பெயரனாவரெனக் கொள்வதே பொருத்தமானதாகும். திரு.உ.வே. சுவாமிநாதஐயரவர்கள் நம்புலவர் 13ம் நூற்றாண்டிற்கு முற்பட்டவரென்று கூறியது உத்தேசத்தின் பேரில் என்பது நன்கு விளங்குதல் காண்க.

பரஞ்சோதி முனிவர் நூலும் 16-ம், 17-ம் நூற்றாண்டி லிருந்த வீமநாத பண்டிதராலும் புகழப்பட்டிருத்தலை, கடம்ப வனபுராணத்தின் அவையடக்கத்தில்,

"திருந்துபுகழ்ப் பரஞ்சோதி மாமுனிவன்
சிவனருளாற் செப்புமெண்ணெண்
பொருந்திவளர் திருவிளையாடற்புராணமுமிருக்க"

என்றும் கூறியுள்ளதால் அறியலாகும். பரஞ்சோதிமுனிவர் நூல் கற்பனைத்திறமும் அணியழகும் நாடகச் சுவைகளு மொருங்கே யமையப் பெற்றுத் திகழ்வதால் திருவிளையாடற் புராணங்களில் தலை சிறந்து விளங்குவதாய் திருவிளையாடற் புராணம் என்னும் அடையில்லாச் சிறப்பெய்தியதாகும். இந் நூல் காவிய விலக்கணங்கள் அமையப் பெற்றதாகும். காவிய விலக்கணங்களுக்குக் கம்பநாடரை இப்புலவர் பின் பற்றினா ரென்பதற்குப் பல சான்றுகள் கூறவியலும்.

இதனையறியாத சிலவாராய்ச்சியாளர் பரஞ்சோதி முனிவர் நூலில் பொய் மிடையப் பெற்றுளதென்று கூறுவர். இப் புலவர் பெருமான் தமது நூல் வளம்பெறுவதற்கு இலக்கணக் குறிப்புக்களை ஆட்சி கொண்டுள்ளது ஓர் புதிய உபாயமாகும்.

"பாயதொன் மரப்பறவை போற்பயன் கொள்வான் பதினெண்
தேய மாந்தருங் கிளந்த சொற்றிரட்சித் தான்றாய
மாயை காரிய வொலியன்றி வான்முதற் கருவி
யாய காரிய வோசையேயாக் கிடந்த தன்றே"

என்னும் செய்யுளின் பின்னிரண்டடிகளில் "மொழி முதற் காரணமா மணுத்திரளொலி, எழுத்து முதற் சார்பென விரு வகைத்தே" என்னும் நன்னூலார் சூத்திரத்தை விளக்கி யுள்ளது காண்க. இவ்வாறே இப்புலவர் இலக்கணக் குறிப் புக்களை பலவிடத்து ஆண்டுள்ளாராதலின் இவர் ஆண்டுள்ள இலக்கணக் குறிப்புக்களே இவர் நூலின்காலம் அறிவதற்குத் துணையாகும். சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலியோர் கருத்துக்கள் புலவர் நூலில் காணப்படாவாதலின் இப்புலவர் முன் கூறிய உரையாசிரியர்களுக்கு முற்பட்டவ ரென்பதைக் காட்டுவாம்.

இசைவாது வென்ற படலத்தில்,

இருமை யுப்பெறு கற்பிணை ளியம்புவாள் கலத்தின்
வருமரும்பெறற் கல்வியு வாதின்மே லூக்கப்
பெருமை யும்பலர் விரும்புறு பெண்மையின் செருக்குந்
திருமகன்சடை யறியவாய் திறக்க வேண்டாவோ''

என்னும் செய்யுளில் பாணன் மனைவி இசைவாதுக்கு வந்த ஈழத்து விறலியை "கலத்தின் வருமரும் பெறற் கல்வி" என்றதால் அவள் பரத்தைமையை குறிப்பிக்கின்றவழகு இன்புறற்பாலது. இங்குக் கூறிய கருத்தாவது கற்பிற் சேர்ந்த பெண்பாலார் கலத்தின்மீது போதல் தகாதென்பதும் இவ்விலக்கை மீறிப் போவது பரத்தையர்க்குரியதாகும் என்பதுமாம். நச்சினார்க்கினியர் "முந்நீர் வழக்க மகடூவோ டில்லை" என்னும் சூத்திரத்தில், முந்நீர் என்பதற்கு "ஓதலும் தூதும் பொருளுமாகிய மூன்று நீர்மை" என்று பொருள் கூறியுள்ளார். பரஞ்சோதியார் நச்சினார்க்கினியருக்குப் பிற்காலத்தவராயின் இவர் கருத்தைத் தழுவியிருக்கக் கூடும். முந்நீர் வழக்கம் என்பதற்கு கடலின்மேல் செல்லுதல் என இளம்பூரணர் கருத்தையும் நாற்கவிராச நம்பி கருத்தையும் பின்பற்றி இப்புலவர் கற்புக்குரிய மங்கையர் கடலைக் கடந்தேகுதல் தகாதெனப் பொருள் விரித்துரைத்தாராவர். மற்றும் இப்புலவர் சிறுபொழுது ஐவகைத்தாகுமென்னும் கொள்கையுடையவர். இதனை,

"ஆண்டினோ டயனம் பருவந் திங்களா றிரண்டிருபக்க
மீண்டு மைப் பொழுதியோ கங்கள் கரணங்கள்''

என்னும் திருமணப்படலம் 88-ம் செய்யுளில் கூறியுள்ளது காண்க. நச்சினார்க்கினியர், சிவஞான முனிவர் இலக்கண விளக்க வாசிரியர் முதலியோர் சிறுபொழுது அறுவகைத்தாகும் என்னும் கருத்துடையவராவர். புலவர் பிற்காலத்தவராயின் இவ்வாசிரியர்கள் கருத்தைத் தழுவாத காரணமென்னை? தமிழ் விடுதூதுகாரரும் அறு வகைத்தெனக் கொண்டவரென்பர். எனவே நச்சினார்க்கினியர் முதலிய பிற்கால வாசிரியர்களுக்கும் பரஞ் சோதியார் முற்பட்டவ ராவரென்க. சிறுபொழுது

ஐவகைத் தாகுமென்று அகப்பொருள் விளக்க வாசிரியரான நாற் கவிராச நம்பிகள் கூறியுள்ள

"மாலை யாமம் வைகறை எற்படு
காலை வெங்கதிர் காயுநண் பகலெனக்
கைவகை சிறுபொழு தைவகைத் தாகும்"

என்னும் சூத்திரத்தின் கருத்தையே பரஞ்சோதியார் பின் பற்றினரென்பதை யறிக. நாற் கவிராச நம்பிகள் 12-ம் நூற்றுண்டிலிருந்தவராவர். இவ்வாசிரியர்க்கு வைகுறுவிடியல் ஒரே பொழுதாகும். இதனைச் சிறப்பித்து பரஞ்சோதியார்

"சங்கவான் றமிழ்த் தெய்வப் புலவோரு முடனெழுந்து [சைலவேந்தன்
மங்கைநா யகன்போன வழிபோயங் கிருந்தா ரவ்வழி [நாள்வைகற்
கங்குல்வாய் புலரவரும் வைகறையிற் பள்ளியுணர் காலத் [தெய்தி
யங்கணு யகனடியார் சேவிப்பா ரிலிங்க வுருவங் காணுர்"
(இடைக்காடன் பின் போன படலம் செய்.12.)

என வைகறையை விரித்துக் கூறியுள்ளார். இனிப் புலவர் தொல்காப்பிய வுரையாசிரியரான பேராசிரியருக்கு முற்பட்டவரென்பதற்கு, பன்றிக் குட்டிக்கு ந் தாயான படலத்தில் பன்றியின் பெண்பாற்கு பேடு, பெடை உரியதாமெனக்கொண்டு "பின் றுணையாய பெடைத் தனியேனம்" எனவும் "விறனவில் பேட்டை விளிப்பது" எனவும் (45-46 செய்) கூறியுள்ளது ஓர் சான்றாகும். பன்றியின் பெண்பாற்கு,

"பன்றி புல்வாய் நாயென மூன்று
மொன்றிய வென்ப பிணவென் பெயர்க்கொடை"

என்னும் சிறப்புச் சூத்திரத்தில் கூறப்பட்ட பிணவென்னும் பெயரை இப்புலவர் இப்படலத்தில் ஒருமுறையேனும் கூறுதது நோக்கத்தக்கது. தொல்காப்பியம், மரபியலில்

"ஒட்டகங் குதிரை கழுதை மரையிவை
பெட்டை யென்னும் பெயர்க் கொடைக்குரிய" எனவும்

"புள்ளு முரிய வப்பெயர்க் கென்ப" எனவும்
"பேடையும் பெடையும் நாடி னென்றும்" எனவும்

வரும் சூத்திரவுரைகளில் பேடும் பெடையும் பெரும் பான்மை புள்ளிற்கு வழங்குமெனவும் பெட்டை என்பது புள்ளிற்கு சிறு பான்மை வழங்குமெனவும் பேராசிரியர் கூறினர். பேராசிரியர் பேடும் பெடையும் விலங்குகளுக்கு வழங்குமெனக்கூறினாரில்லை. பேராசிரியர் உரையே சிறந்ததாகும். நம் புலவர் புள்ளிற்கு வழங்கும் பெயரை பன்றிக்கு வழங்கியதால் இளம்பூரணர் உரையைத் தழுவியும் விரித்துரைத்தாரெனக்கொள்ளவேண்டும். இளம்பூரணர் மூன்றும் சூத்திரத்தில் "நாடின்" என்றதால் பேடும் பெடையும், முதல் சூத்திரத்தில் குறித்த ஒட்டகம் முதலிய விலங்குகளுக்கும் உரியதாகுமென வுரைத்தார். நம் புலவர் விலங்குகளுக்கெல்லாம் இவ்விரு பெயரும் உரியவாகு மெனக் கூறினாராகல்வேண்டும். புலவர் பேராசிரியர் கருத்தைத் தழுவவில்லை யாதலின் பேராசிரியருக்கு முற்பட்டவராவர். பேராசிரியர் 14-ம் நூற்றாண்டில் திகழ்ந்தவராவர். எனவே பரஞ்சோதியார் 14-ம் நூற்றாண்டிற்கு முற்பட்டவராவ ரெனலாம். (தொடரும்.)

திருக்குறளுதலிய நெறிமுறை

திரு. K. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் B.A., B.L., தஞ்சை

(முற்றொடர்ச்சி துணர் 12, மலர் 5, பக்கம் 182)

இத்தகைய நூலறிவோடும் கேள்வியறிவோடும் நுண்ணறிவு வாய்க்கப் பெற்றவர்கள், தாம் எண்ணிய கருமங்களை எண்ணிய வாறே திண்ணமாய் முடிக்கும் ஆற்றலுடையர். கல்வி யறிவே எத்தகைய முயற்சியும் நன்கு நடைபெறுதற்கு சிறந்த சாதனமா யிருத்தலான் அவ்வறிவே ஒருவனுக்கு ஊக்கம் ஊட்டி சலிப் பின்றிச் செய்யும் மன உறுதியினை பயக்கவல்லது. இவ்வாறு

மனவெழுச்சி யுடையானிடமே செல்வம் திரண்டு செல்லும்; விதியின் வழி அவ்வாக்கம் இழந்துபோனாலும் அதனால்விளையும் வருத்தத்தினால், மனவெழுச்சியுடையவர் மனஞ் சுழன்று தளரார். ஓர் தொழிலை இயற்றுவதற்கு முன் ஒருவர் அதனைப் பல்வகையானும் ஆராய்ந்து தெளிந்து பின்னர் துணிந்து மடியின்று முயன்று முடிக்கவேண்டும். 'எண்ணித் துணிக கருமந் துணிந்தபி, னெண்ணுவ மென்பதிழுக்கு' என்பது பொய்யாமொழி. இவ்வாறு எண்ணித் துணிந்து ஓர் தொழிலினைச் செய்யின் அவன் தான் கொண்ட எண்ணத்தை நிறைவேற்றுவானென்ற உண்மையினை தெய்வப் புலவர் 'எண்ணிய வெண்ணியாங்கெய்துபவெண்ணியார், திண்ணியராகப்பெறின்' என்ற குறளால் தெளியப் படுத்துகின்றார். தன் எண்ணத்தை நிறைவேற்றும் மனவெழுச்சியில்லான் மடியின்பால் மடிந்து தன் குடியையுமிழந்து பல்பெருங் குற்றங்களுக்கு ஆளாகுவன்; எனவே தாம் பிறந்த குடியை நற்குடி யாக்கவேண்டுமென ஒருவனுக்கு எண்ணமுளதேல் அவன் மடியினை அடியோடு அழிக்க முயலவேண்டும். 'மடியை மடியா வொழுகல் குடியைக், குடியாக வேண்டுபவர்' என்பது திருக்குறள். எளிதே பெறத்தகும் நன்மைகள் தனக்கெதிராக யிருந்தும், முயற்சியின்மையால் மடியுற்று அவைகளைப் பெறாதே யிருப்பவன் யாதொரு பயனும் அடையான்; ஊழினாலே ஒன்றுமடைவதற்கிடமில்லாதிருந்தாலும் மன உறுதி யுடையான் தன் தளராத முயற்சியினால் அவ்வூழையுங்கடந்து விதியை ஊக்கத்தால்வெல்வான்; இஃதே திருவள்ளுவர் கருத்தென்பதை 'ஊழையு முப்பக்கங் காண்பருலை வின்றித், தாழா துஞற்றுபவர்' என்ற குறளால் நன்குணரலாகும். விதிவலிதென 'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினுந் தான்முந் துறும்' என்றறிவிக்கப் பட்டதனுன், சின்னாட் பல்பிணிச் சிற்றறிவுடையராகிய நாம் யாதும் ஊழே என்றிராது முயற்சியைக் கைவிடல் நீதமாகாது. முயற்சி ஒன்றினாலேயே எதையும் பெறுதல் கூடுமென நம் பெருநாவலர்

முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்

தெய்வத் தானுகாதெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்

எனப் புகன்றிருப்பது புலப்படும். ஊழையிலழிந்திய பாண்டிலைக் கடா தன் வருத்தத்தையும் பாராது மனங்கலங்காதே மாருரங் கொண்டிழுப்பதே போன்று மக்கள் தாமியற்றும் தொழிலை ஆராய்ந்து எவ்வாற்ருனும் தளராது முயன்ருராகில் செயற்கரிய செயல்கள் யாவும் எளிதே அடையப்பெறுவர்; இவ்வாறில்லாது உள்ளவெறுக்கையாகிய உரம்அற்று ஒழுகுபவர்மரங்களுக்கொப்பாவர்எனவள்ளுவர்கூறியிருப்பது ஈண்டுநோக்கத்தக்கது.

நன் முயற்சியுடையார் ஒவ்வொருவரும் தம்மைப்பற்றிய அறியாமையினை கல்வியறிவானே நீக்கி, தாம் துவங்கிய நன் முயற்சியை முடிக்க இடனறிந்தும் காலமறிந்தும் தெளிந்து தம்மெண்ணத்தை நிறைவேற்றுவார். காலங் கருதி ஓர் தொழிலினை முடித்தற்கு அதற்குரிய சாதனங்களால், ஒருவன் தன் வலியை நோக்கி இடத்தொடு பொருந்த அத் தொழிலைத் தெரிந்து செய்யின், அவனுக்கு அருவினையென்ப தொன்றுளதோ? அஃதில்லையானதால், நாம் காலங்கருதி இடனறிந்து எடுத்த காரியத்தை முடித்தற்கு முற்படவேண்டுவது அவசியமாதல் காண்க.

இத்தகைய நன்முயற்சி யுடையராயும், அடக்க முடையராயும் நடுநிலை தவருதவராயும், நல்லொழுக்க முடையராயும் அறன்நின்று இல்வாழ்பவர் நல்லகுடிப்பிறந்தாராவர். நிலத்தினதியல்பை அதன்கண் முளைத்த முளைகாட்டுதல் போன்று நற்குலத்தினதியல்பை அக்குலத்திற் பிறந்த மக்களது குணம் காட்டிவிடுமாதலான் நற்குடியிற் பிறந்தார், நலம் வேண்டி ஒழுக்கமும், வாய்மையும், நாணும் ஆகிய இம் மூன்றிடத்தே வழுவாது, யாவரிடத்தும் இன்முகங்கொண்டு இகழாமை நீக்கி இன்சொல் புகன்றும், இனியவை செய்தும், வறியார்க்கு எஞ்ஞான்றும் இல்லையெனமாட்டாராய், ('இலனென்னுமெவ்வமுரையாமை யீதல், குலனுடையான் கண்ணேயுள') ஈகைக் குணம் வாய்ந்து, யாவரிடத்தும் சலம்பற்றிச் சால்பில செய்

யாது, பெருமை, பெருமிதமின்மையென வோர்ந்து தாழ்வென்னும் தன்மையின் இயலுக் கிணங்க பணிதலாகிய அணியைக் கொண்டு இளிவரின் வாழாத மானமுடையராய் யார்மாட்டும் பண்புடையராயும் ஒழுகிவாழ்வார். மானமாக குற்றமிலனாய் தன்னிலைமையிற்றாழாது குடிசெய்து வாழ்வான், தன்குடியினது பெருமையினை ஆள்வினையானும் ஆன்ற வறிவானும் மேல் மேலாகப் பெருக்கி வளர்த்து இல்லறம் பொருளளவிற் கேற்ப செய்ய வேண்டும். பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை யென வள்ளுவர் கூறியதன் நோக்கம் யாதெனின் பொருளானது பொருளல்லாதவரையும் ஓர்பொருளாகச் செய்யுமாதலானென அறிக. அப்பொருளில்லாரையும் யாவரும் எள்ளுவர். களவாடாது திறனறிந்து நல்வழியான் வரும்பொருள் அறமும் இன்பமும் பயக்குமாதலால் அத்தகைய பொருள் இல்லறம் வழாது நடத்ததற் குரிய பெரும் பொருளாகும். அப்பொருளை ஈட்டுதலும் அதற்கேற்ற கருவிகளை ஆக்கிக்கொள்வதும் மக்கள் தம் வாழ்க்கைக்கு உறுதுணை ஆகவே அறன்நின்று பொருளை சம்பாதிப்போர் நிலந்தரும் பொருளைக்கொண்டு முயற்சியின் பயனாகத் தங்கட்கு இன்றி யமையாதன வற்றைச் செய்து கொள்ளும் திறனுடையரா யிருத்தல்வேண்டும்.

மக்கள் தொழின்முறையில் கொள்ளத்தகும் முயற்சிகள் பலவற்றுள் தலைசிறந்து நிற்கும் தகைமை வாய்ந்தது உழவுத் தொழிலேயாதலின், அத்தொழிலை உலைவிலாஉழைப்புக்கொண்டு செழுமையுறச் செய்யின் அஃது பொருள் வளத்தைப் பெருக்கும். இத்தொழிலின் செல்வத்தைக் கருதியே திருவள்ளுவதேவர், உலகம் சுழன்றும் அஃது ஏர்ப்பின்னதேயென வெண்ணி வேளாண்மை கொண்ட தாளாளரே பிறர் தொழும்பு பூண்டு வாழாதவர் என்று 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந், தொழுதுண்டு பின் செல்பவர்' என்ற குறளால் விளங்க வைத்து வேளாண்மைய மற்றெல்லாத் தொழில்களிலும் சிறந்ததென அறிவுறுத்தினர். ஊழினாலே வறுமையடைந்து பொருளற்றார், இவ்வுழவுத்தொழிலைக்கைக்கொள்ளின் பின்னொரு காலத்தில் அவர் செல்வத்தினால் பொலிய, பொருளாதாரமாகிய

தொழிலின் வளத்தினைப் பெருக்கும் இருபெரு சாதனங்களைக் கூறி அவர்களுக்கும் நாயனார் அறிவுறுத்தியது நோக்கத்தக்கது. அவ்விரு சாதனங்களைப்பின்வரும் குறட்பாக்கள் நன்கு விளக்கு தல் காண்க.

தொடிப் புழுதிகஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண் டாது சாலப்படும்,
ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபி,
னீரினு நன்றதன் காப்பு.

எனவே வறுமையினை யகற்றும் நற்பணி வேளாண்மையே யெனப் பெறும். இதனை 'இலமென்றசைஇ யிருப்பாரைக் காணி, னிலமென்னு நல்லாணகும்' என்ற குறளில் நாயனார் நயம் ஆழ்ந்து நோக்கி, பொருந்திய வாக்கால் அருளிச்செய்தது இன்புறத் தக்கதாகும்.

உழவுத்தொழிலால் விளைபொருள்கள் பெருகியவழி வாணி கம் இன்றியமையாததெனவெண்ணி வாணிக வாழ்க்கையை மேம்படுத்த அவ்வாணிகர் கையாள வேண்டிய சிறந்த ஒழுக்கங் களைத் திருவள்ளுவர் கூறிப்போந்தார். வாணிகர்கள் வாய்மை யினின்றும் வழுவாது பிறர் பொருளையும் தம் பொருளைப் போல்பேணி வாணிபம் செய்தல் வேண்டுமென 'வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப், பிறவுந் தமபோற் செயின்' எனவும் அவ்வாறு தொழில் மேல் மனஞ்செல்லுங் காலத்து அத்தொழிலான் ஊதியம் அழிவதும், ஆவதும், என இன்னோ ரன்னவைகளை ஆய்ந்து அத்தொழிலைச் செய்யவேண்டுமென 'அழிவதூஉ மாவதூஉ மாகிவழி பயக்கு, மூதியமுஞ் சூழ்ந்து செயல்,' எனவும் திருவள்ளுவர் அருளிச் செய்தது அறியத் தக்கது; 'முதலிலார்க்கு ஊதியமில்லை' என, பெரியாரைத் துணை கோடல் எனும் அதிகாரத்தில் கூறியிருப்பதனால்' வணிகர்கள் தம் தொழிலை செவ்வனே செய்ய முதல் வேண்டுமெனவும் அதனால் ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினையை மேற் கொள்ளக் கூடாதெனவும், அவ்வணிக மக்களுக்கு தெய்வப் புலவர் அறிவுறுத்தியது பாராட்டற் பாலதாகும்.

இதுகாறும் அறம் போற்றும் இல்வாழ்க்கைக்குரிய நற்குணம், நற்செயல் முதலானவற்றை ஆய்ந்தும் இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டேயெனவும் கண்டு தெளிந்தோமாதலின், அவ்வினிய வாழ்க்கைக்கு இடையூறாகிய இருமனப் பெண்டிர், கள்கவறுகள், பெண்வழிச் சேறல், நன்றியில் செல்வம், இரவு இரவச்சம் முதலியவற்றையும் காண்குவம்.

மதிநலத்தின் மாண்ட அறிவினர் தம் மனைவியைத் துறந்து பிறர் நலம் வேண்டும் பொது மகளிரது புன்னலம் விரும்பி யொழுகுதல் தகாது; அவர்கள் அன்புபற்றி விரும்பாது பொருள்பற்றி விழையும் பண்பின் மகளிராதல்பற்றி, அருட் பொருளறியும் அறிவினர் அவர்களைச் சேரார். புரையிலாது அவர்கள் பொருட் பெண்டிரோடு முயங்கிச் சேர்ந்தால், உருவும் திருவும் கெட்டழிவார், எனவே இருமனப் பெண்டிரது வலைக் குட்பட்டொழுகுவது இனிய வாழ்க்கைக்கு இடையூறுபடுத்தலான் அதனைக் கடியப்பட்டது காண்க.

இருமனப் பெண்டிரது காதலால்வரும் தீங்கினை அறிந்த பின்னர் கட்காதலும் கவறும் இனிய இல் வாழ்வுடையானுக்கு எவ்வாறு துன்பப் பெருக்கைத் தருகின்றதென்பதை ஒரு சிறிதே கவனிப்பாம். கள்ளுண்பார் மனமொழி மெய்கள் தன் வசப்படாது சோர்வையடைதலானும், அறிவும் மடம் படுதலையுமுடைத்தாய காரணங்களானும், கள்ளுண்டலும் கடியப் பட்டவாறு காண்க. கவறும், அதனை விரும்பினார்க்கு சிறுமை பலசெய்து அவரது ஒளியையும் ஒழுக்கத்தையும் ஒழித்து கல்வி நலத்தையும் செல்வ நலத்தையும் துடைத்து, மெய்யல்லாதன வைகளை ஓர் பொருளாக மேற்கொளப்பண்ணி அவரது சீரை அழிக்குமாதலான், அக்கவறும் நல்வாழ்வினை விரும்பும் அறிவுடையோர் வேண்டற்க. கவறாடல் பாவத்தொழிலாதலான் அஃது அத்தொழிலைக் கைக்கொண்டானுக்கு என்றும் உதவி செய்யுமென்று எண்ணுவது முறையாகுமோ! 'ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ, னன்றெய்தி வாழ்வதோ ராறு' என்பது திருவள்ளுவப்பயன். ஆகவே இதுகாறுங்

கூறியவாற்றான் 'இருமனப்பெண்டிருங் கள்ளுங் கவறுந் திரு நீக்கப்பட்டார் தொடர்பு' என அறியப்பெற்றாம்.

இல்வாழ்க்கை நிலைக்கு கற்புடைய மனையாளுடன் நன்னெறிக்கண் நின்று அறத்தினைப் புரிதல் சாலவும் விரும்பத் தக்கதென அறியப் பெற்றோமெனின், இன்பங்காரணமாக, தம் மனையாளை விரும்பி அவள் வழி நடப்பவர் மாண் பயனெய் தாரென அறநூல் புகலும்; அவ்வாறு மனையாளை அஞ்சி அவள் வழி நடந்து ஏவல் செய்தொழுகும் மறுமையிலாளன் நாணுற்று ஆக்கங்கெட்டு தொழிலையாளுந் தன்மையிலானும், நட்டார் குறையை இனிது முடிக்கமாட்டானும் பெண் சேர்ந்தாம் பேதைமையி லழுந்தி அறவினையுமான்ற பொருளும் பிறவினையு மில்லாது கெடுவன்; எனவே திருவள்ளுவர் உயர்ந்தோர் பலரும் ஒழுகியவழி பெண்வழிச் சேறலல்லவென இகழ்ந்ததை மக்கள் யாவரும் சிந்தையைத் தெளிவித்துக் கருதற்பாலதே.

பொது நலம்பேணும் பெருந்தகை வாய்ந்து அறனின்று வாழ்வார் யாவரிடத்தும் அன்புடையராய் தம்மிடமுள்ள பொருளை இல்லாத வறியார்க்கு 'இலனென்னுமெவ்வ முரையாமை யீதல், குலனுடையான் கண்ணேயுள' என நாயனார் அருளியபடி இல்லையென மாட்டாராய் அவர் துயர்களைவர் என முன்னரே விளங்க வைத்தோம். இனி பொருளொன்றினால் யாவுமுண்டாகுமெனக் கருதி அம்மயக்கத்தினால் கொடுப்பதூஉ மின்றியும் தாமும் துய்ப்பதூஉமின்றியும் தக்கார்க்கு ஒன்று ஈதலியல்பிலானாய் வாழ்பவன் இதுகாறும் கூறிவந்த இனிய வாழ்க்கைக்கு இடையூறாக நிற்பான். ஏனெனின் 'அறிவினானாகுவதுண்டோ பிறிதினோய், தந்நோய் போற் போற்றாக் கடை' என்ற திருக்குறளின்படி பிறர் வறுமைத் துன்பத்தை தனதென வெண்ணி அவர் துன்பத்தை துடைப்பது அறிவுடை மக்கள் கடமையாயிருக்க, அதனைச் சிறிதும் நினையாமலும், அவர் துயர் களையாதும் நடப்பவர், பொருளுடையராயிருந்தாலும் அவர் 'தோற்றம் நிலக்குப்பொறை'யென எளிதிலடக்கி திருவள்ளுவர் கூறியிருப்பது அறியத்தக்கது. பொருளீட்டமிவறி புகழையும் வேண்டாது அறன் நோக்காது பாடுபட்டுத்தேடி

வைத்தபொருள் பிறர் கொள்வாராதலின், அதனைப்பெற்ற ஞான்றே வறியார்க்கு வழங்காதும் தானும் அனுபவியாமலும் உலோபம்செய்து மறுபிறப்பினிலே மயக்கத்தானிறைந்த பேய்ப் பிறப்படைவதனால், அவர் தாம்பெற்ற பொருளினால் எய்தும் பயன் யாதுளது?

வறுமையைப்போல் துன்பம் இவ்வுலகில் யாதுமில்லை, 'நல் குரவென்னு மிடும்பையுட் பல்குறைத், துன்பங்கள் சென்று படும்' என்றதனானே வறுமையென்று சொல்லப்படும் துன்பம் ஒன்றினுள்ளே பலவாகிய துன்பங்களும் தோற்று நிற்கும், எனவே நல்கூர்ந்தாரை அவர் தம் இல்லாளும் வேண்டாள்; ஈன்றதாயும் அவரை ஏறெடுத்தும் பாராள்; நற்பொருளினை நன் குணர்ந்து சொல்லும் அவன் வாய்ச்சொல்லும் சோர்வுபடும்; ஆகையால் வறுமைகாரணமாக வறியார் புகழுடனே மானத்தை நிறுத்துதலை வேண்டாதவராய் அதனைத் துறந்து குறையிரந்து நிற்குங்காலத்து அவரது வறுமையால் வரும் இடும்பை பொரு ளுதவியால் துடைக்க முன் வருபவர் அவர் பால் இரக்கங் கொண்டு கரப்பில்லா நெஞ்சினையுடையராய் அவரை இகழாதும் எள்ளாதும் மகிழ்ந்து பொருள் கொடுத்துதவுதல் வேண்டுமென இல்லறத்திலொழுகும் நல்லொழுக்கம் வாய்ந்தார்க்கு திருவள்ளு வர் பணித்துள்ளாரன்றோ! ஒளிக்காமற் கொடுப்பவர் இவ் வையகத்தே இருக்கின்றபடியினால் இரப்பவர் வறுமைக் காரண மாக பிறர் பால் சென்றிரந்து உயிர் வாழ்தல் நவையென அறிவுடைப் பெரியார் இகழுதல் இழுக்கென திருவள்ளுவர் கூறியருளியது அறியற்பாற்று.

(தொடரும்.)

மகாபலிபுரத்தின் பண்டையப் பெயர்

திரு. C. M. இராமச்சந்திரசெட்டியார் அவர்கள் B.A., B.L.,
வழக்கறிஞர், கோயமுத்தூர்.

H. ஹீராஸ் என்ற ஆசிரியர் பல்லவர்கள் சரித்திரத்தைப் பற்றி எழுதின நூலில் மகாபலிபுரத்தைப்பற்றி சில அபிப்பிராயங்கள் கூறியிருக்கின்றார். மகாபலிபுரம் பல்லவர்கள் ஆட்சிக்கு முந்தியே ஏற்பட்டதென்றும் அக்காலத்தில் அதற்குத் தலசயனம் என்ற பெயர் இருந்ததென்றும் அவர் ஊகிக்கின்றார். அதற்கு அவர் கூறும் காரணம் என்னவெனில் நந்திவர்மன் பல்லவமல்லன் காலத்திலிருந்த வைஷ்ணவ சமயத்து ஆழ்வாரான திருமங்கையாழ்வார் அவ்வூரை "கடல்மல்லைத்தலசயனம்" என்கிறார். அவ்வார்த்தைகளுக்குப் பொருள் "தலசயனம் என்ற பெயர்பெற்ற கடற்கரையில் மலை" என்று ஹீராஸ் சொல்லுகிறார். நரசிம்மவர்மன் மகாமல்லனால் அழகு செய்யப்பட்டபின் அவ்வூருக்கு மாமல்லபுரம் என்றபெயர் ஏற்பட்டிருந்தபோதிலும் அதற்குமுந்தி அவ்வூருக்கு தலசயனம் என்ற பெயரே இருந்திருக்கவேண்டும் என்கின்றார்.

ஹீராஸ் ஆசிரியர் சொல்லும் அபிப்பிராயத்தைச் சிறிது ஆராய்வோம். நரசிம்மவர்மன் மாமல்லனால் கட்டப்பட்டதினாலே இவ்வூருக்குத் தலசயனம் என்ற பெயர் வந்ததென்பது நாளதுவரை சரித்திராசிரியர்கள் அபிப்பிராயமாகும். ஹீராஸ் துரை அவர்கள் இவ்வூர் நரசிம்மவர்மனுக்கு முந்தியேயிருந்ததென்றும் அவன் தகப்பன் மகேந்திரவர்மன் சில குகை ஆலயங்களைச் செதுக்கினான் என்றும் சொல்லுகிறார். இது சரியே.

ஆனால் அவ்வூர் பல்லவர்களுக்கு முந்தியேயிருந்ததென்று சொல்லி அதற்கு அக்காலத்தில் தலசயனம் என்ற பெயர் இருந்ததென்றுகூறி அதற்குத் திருமங்கையாழ்வாரது பெரிய திருமொழியை ஆதாரமாகக் கூறினது வியக்கத்தக்கதே. அவ்வாறு கூறியதில் "கடல்மல்லைத் தலசயனம்" என்ற பதங்களுக்கு "தலசயனம் எனப் பெயர்பெற்ற கடல் அருகில்மலை"

என்ற பொருள் கொள்ளுகிறார். தமிழ் மொழியில் இப்பொருள் ஏற்படாது. மல்லை என்ற வார்த்தைக்கு மலை என்ற பொருள் இல்லை. திருமங்கையாழ்வாரது சொற்களுக்கு "கடற்கரையிலுள்ள மலையின்கண் உள்ள தலசயனம் என்ற கோயில்" என்ற பொருள் ஏற்படும். தமிழ் மொழியின் பொருள் அறியாது அவ்வாசிரியர் கூறினர் போலும். தமிழ் இலக்கணமும் அவ்வாசிரியர் கூற்றுக்கு இடந்தராது. சைவ வைஷ்ணவ கிரந்தங்களிலும் கல்வெட்டுகளிலும் கிடைக்கக் கூடிய மேற்கோள்களை ஆராய்ந்து பார்த்தால் ஊர்ப்பெயரும் ஆலயப்பெயரும் சேர்த்துச் சொல்லுவது அக்காலத்து வழக்கு எனத்தெரியவரும். சில உதாரணங்கள் கூறுவோம்.

சைவம்.

பெயர்கள்.	ஊர்ப்பெயர்.	ஆலயப்பெயர்.
புலியூர்ச்சிற்றம்பலம்	புலியூர்	சிற்றம்பலம்
கருவூர்ப்பசுபதீஸ்வரம்	கருவூர்	பசுபதீஸ்வரம்
தஞ்சைராஜராஜேஸ்வரம்	தஞ்சை	ராஜராஜேஸ்வரம்
வெண்ணைநல்லூர் அருள் துறை	வெண்ணைநல்லூர்	அருள்துறை
குடந்தைக்காரோணம்	குடந்தை	காரோணம்

வைஷ்ணவம்.

திருவரங்கம்பெரியகோயில்	திருவரங்கம்	பெரியகோயில்
தஞ்சைமாமணிகோயில்	தஞ்சை	மாமணிகோயில்
தில்லைத்திருச்சித்திரக் கூடம்	தில்லை	திருச்சித்திரக் கூடம்
காழிசீராமவிண்ணகரம்	காழி	சீராமவிண்ண கரம்
கச்சிஅத்திகிரி	கச்சி	அத்திகிரி
நந்திபுரவிண்ணகரம்	நந்திபுரம்	விண்ணகரம்

அதைப்போலவே:—

திருக்கடல்மல்லேத்தலசயனம் திருக்கடல்மல்லே தலசயனம்

கல்வெட்டு.

தஞ்சைராஜராஜேஸ்வரம்	தஞ்சை	ராஜராஜேஸ்வரம்
கச்சிராஜசிம்மேஸ்வரம்	கச்சி	ராஜசிம்மேஸ்வரம்

அதைப்போலவே:—

மல்லேஜலசயனம்	**மல்லே**	**ஜலசயனம்**

மேற்கூறிய உதாரணங்களால் மல்லே என்பது ஊர்பெயரும் தலசயனம் என்பது ஆலயப் பெயருமாக இருக்கவேண்டுமென்பது அறியலாம். மாமல்லபுரத்தில் பல ஆலயங்கள் உண்டு. அவைகளில் வைஷ்ணவ ஆலயங்கள் இரண்டு முக்கியமானவை. இவ்விரண்டிலும் திருமால் பள்ளிகொண்ட நிலைமை (சயனம்)யில் இருக்கிறார். அவைகளில் ஒரு ஆலயம் நிலத்திலும் மற்ருென்று கடலிலும் உண்டு. நிலத்தில் இருப்பதற்குத் தலசயனம் என்றும் கடலில் இருப்பதற்கு ஜலசயனம் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. நந்திவர்மன் பல்லவவர்மன் காலத்தில் இருந்த திருமங்கை ஆழ்வார் தலசயனப் பெருமாளைக் குறித்து பதிகம் பாடியிருக்கின்றார். இத்தலத்தைப் பற்றிப் பெரிய திருமொழியில் இரண்டு பதிகங்கள் உண்டு. முதலில் மகுடமாக,

"கண்டதுநான் கடன்மல்லேத் தலசயனத்தே"

என்றும் இரண்டாவதில்,

"கடன்மல்லேத் தலசயனம்"

என்றும் கூறுகின்றார்.

தலசயனத்திற்கு எதிரிடையாக கடற்கரையிலுள்ள நீரால் மோதப்பட்ட ஆலயம் ஜலசயனம் எனப்பட்டது. இவ்வாலயத்துக் கல்வெட்டுகளில்,

மாமல்ல புரத்து ஜலசயன தேவர் (S. I. I. Vol. I No. 40)

மாமல்ல புரத்து நகரத்துளோமும்--இன்னகரத்து
ஜலசயனத்து...பள்ளிகொண்டருளிய தேவரும்,

(S. I. I. Vol. I No. 41)

என்று கூறப்பட்டுள்ளன. ஜலசயன பெருமாள்கோயில் நரசிம்மவர்மன் ராஜசிம்மனால் கட்டப்பட்டது. தம்நூலில் ஹீராஸ் ஆசிரியர் தலசயனப் பெருமாள் கோயில் ஒன்று மாமல்லபுரத்தில் இருப்பதாகவும் ஒத்துக்கொள்ளுகிறார். ஆகவே நரசிம்மன் காலத்தில் ஜலசயனத்துக்கு எதிரிடையாக தலசயனம் இருந்திருக்க வேண்டும். ஆகவே அப்பெயர் அவ்வூரின் பழைய பெயராக இருக்கமுடியாது.

மேலும் திருமங்கையாழ்வார் இத்தலத்தைப்பற்றி வேறு இடங்களில் கூறும்போது தலசயனம என்றபெயர் இல்லாமல் கடல்மல்லை என்று மாத்திரம் கூறுகின்றார். உதாரணங்கள்:

''கடன் மல்லையுட் கிடந்தாய்—'' திருவாலி III—5

''கடன் மல்லைக்கிடந்த கரும்பே—'' திருநறையூர் VII—1

''கச்சி, பேர்மல்லை'' திருக்குறுந்தாண்டகம்—19

''காரார் கடந்தை, கடிகை, கடன்மல்லை''—சிறியதிருமடல் 73

''மன்னும் கடன்மல்லை மாயவனை''—பெரிய திருமடல்—120

அவருக்குமுன் அவதரித்த பூதத்தாழ்வார் தம் இயற்பாவில் தாம் அவதரித்த நகராகிய மல்லையை,

''வேலை தமருள்ளும் மாமல்லை''—இயற்பா 270

என்கிறார். இம்மேற்கோள்களினால் இவ்வூருக்கு கடல்மல்லை, மல்லை, மாமல்லை, என்ற பெயர்களே இருந்தன என அறியலாம்.

மேலும் விரராஜேந்திர சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்றில் (S. I. I. Vol. I. No. 42) இவ்வூரின் பெயர் ''திருக்கடன் மல்லை'' என்றே கண்டிருக்கின்றது.

மேலும் குலோத்துங்கச் சோழன் அனபாயர் காலத்து மந்திரியாயிருந்த சேக்கிழார் பெருமான் இநநகரை தொண்டை

நாட்டில் குறுஞ்சித்திணையும் நெய்தற்றிணையும் விரவியதற்கு ஒரு உதாரணமாக எடுத்துக்காட்டி அதன்பெயரை மாமல்லை என்றே கூறுகிறார். அவ்வடிகள்,

"நீடு நெய்தலும் குறிஞ்சியும் புணர்நிலம் பலவால்
ஆடுநீள் கொடி மாடமா மல்லையே அனைய"
பெரிய புராணம்—திருக்குறிப்பு சே. 41. ஆகும்.

திரு P. T. ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்கள் மல்லையின் பண்டைப் பெயர் மாவிலங்கை என்கிறார். இதற்கு ஆதாரம் புறநானூறு என்கிறார். ஆனால் அந்நூலில் அக்கூற்றிற்கு ஆதாரம் காணவில்லை.

மாமல்லபுரத்துக் கடற்கரையிலுள்ள ஜலசயனப் பெருமாள் கோயிலில் பள்ளிகொண்ட தேவரோடு க்ஷத்திரிய சிம்ஹ பல்லவேஸ்வரரும், ராஜசிம்ஹ பல்லவேஸ்வரரும் எழுந்தருளியிருப்பதாக அவ்வாலயத்துக் கல்வெட்டொன்று கூறுகிறது. இவ்விரு தேவர்களும் சிவ மூர்த்தங்கள். திருமாலோடு சிவபெருமானும் எழுந்தருளி யிருப்பதாக திருமங்கை ஆழ்வார் தம் பாசுரத்தில் குறித்திருப்பது நோக்கத்தக்க ஒரு குறிப்பாகும். ஆகவே மாமல்ல புரத்திற்குப் பண்டையப் பெயர் எது இருந்தபோதிலும் தலசயனம் என்ற பெயராக அது இருக்காது என்பது திண்ணம்.

காலவாராய்ச்சி

கோமான். ம. வி. இராகவன், வித்துவான்
ஔவைத்தமிழகம், திருவத்திபுரம்

I

காலவாராய்ச்சி யென்பது பொதுவாகக் காலம் பற்றிப் பலவகையா னாராயப்படும் ஆராய்ச்சிகளையும் குறிக்குமெனினும் ஈண்டு, அது, பண்டைப் பெருமக்கள் வாழ்ந்த காலத்தைப் பற்றிய வாராய்ச்சியையே குறிப்ப தென்க. காலம் என்று தோன்றிற்று, அன்றே அதுபற்றிய ஆராய்ச்சியும் உடன் தோன்றிற்ருகலான், நம்மனோரான் இதுபோது மேற்கொள்ளப் பட்டமை கொண்டு அதற்குப் புதுமை கற்பித்தல் சாலாதாம். காலத்தின் முற்பட்டதோன் றின்மையின், காலவாராய்ச்சியும் தன்னின் முற்பட்ட தொன்றில்லாத் தொன்மைவாய்ந்தது. பிறவகையாற் காலம் பற்றிய வாராய்ச்சி பண்டைக்காலத்து வழக்கிலிருந்தமை அக்காலத்துப் பனுவற்களானும், அவற்றின் உரைகளானும் உணரக் கிடத்தலின், மக்கள் காலம்பற்றிய ஆராய்ச்சித்துறை அவர்களானறியப் படாத தொன்றென்றல் அமைவதின்று. மக்கட்குப் பெரிதும் பயன் படுவனவே புரிதற் கோட்பாட்டின ராகலான், இத்துறையாற் பின்வருவாரெய்த லாவதொரு பயனின் றென்னுங் கருத்துடைய ராகலானும், காலத்தாற் பெருமை சிறுமை கோடலியல்பின ரல்லராக லானும், அன்னர், அறிந்து வைத்தும் அத்துறைமேற் சேற லொழிவாராயினர். இக்கருத்தினராகலா னன்றே வரலாறு வரைந்து வைக்கும் வழக்கையும் வரைந்தொழுகிப் போவாரா யினதூஉ மென்க.

இக்கருத்தினராய், பெருமக்கள் காலத்தையும் அக்காலத் தில் அவர்களானும் பிறரானும் நிகழ்ந்த அரிய நிகழ்ச்சிகளையும் பிறவற்றையும் விளங்க வரைந்து வைத்தில ரேனும், சிறு பான்மை காலம்பற்றிய சிறுகுறிப்புகள் குறித்து வைக்கும்

வழக்குடையரா யிருந்தமை பெறப்படுகின்றது. இது சாசன காலத்தில் மிருதியும் வழக்கிலிருந்ததாதல் நன்கு அறியப்படுவ தொன்று. பண்டைச் சாசனங்களிற் காணப்பெறும் காலக் குறிப்பும் அவற்றிற் குரியார் அரசு நிலை யெய்திய இத்தனை யாவதியாண்டில் இன்னது நிகழ்ந்தது என்னுந் துணையல்லது, அவர் வாழ்ந்த காலம் இஃதெனத் திட்டமாகத் துணிந்து கோடற்குப் போதிய வகையில் குறிக்கப் பட்டிலது. இது சாசனப் பயிற்சி யுடையார் நன்கறிந்ததொரு செய்தியாகும்.

இங்ஙனம் நம்முன்னோரானொருதலையாகக் கொள்ளப்படாத அக்காலவாராய்ச்சித்துறை, கால வேறுபாட்டானும், மேனாட்டு மக்களோடு மேவிக்கலந்து பயிறலுற்றமையின்பயனாகவும், இது போது நம்மனோர்க்கு மிகவும் இன்றியமையாததொன்றாயிற்று. பண்டைக்காலத்து நம்முன்னோரின் பலதிறப்பட்டநிலைகளையும் அறிதலவாவா னுக்கலுற்ற யாம், அவை யறிதற்குற்ற கருவி யாகிய பண்டை நூல்களையும், உரைகளையும் ஆக்கிய ஆசிரியன் மாருடைய காலத்தைக் கண்டு நிறுவக் கடவோமாயினோம். ஆகவே நூற்பயிற்சியும், அஃகியகன்ற அறிவொட்பமும், ஆராய்ச்சித் திட்பமும், மனத்தூய்மையும், மடிவின்மையு முத லாகப்பலவும் ஒருங்கு வாய்க்கப்பெற்ற சான்றோர் பலர் அத் துறை மேற்சென்று முயறலுருவாராயினர். அங்ஙனம் முயற லுற்ற அவர்கள், போதிய தக்கசாதனங்களின்மையாலும், கற் பனைவழக்குக்களானும், நூலாசிரியன்மாரும் உரையாசிரியன்மா ரும் செய்துவைத்துள்ள மயக்கத்தானும் ஒரு முடிவு கூறலாற் ருது, குன்று முட்டிய குரீஇப் போலவும் குறிச்சி புக்கமான் போல வும் இடையிடர்ப்பட்டுத் தடையுற்றுத் தியங்குதல் காண்டும். உரியநெறி நின்று அரிது முயலுவார்க்கே இவ்வாறிடர்ப்பாடுள தெனின், நெறி பிறழ்ந்து முயலுவார் நிலை கூறல் வேண்டா.

நிற்க, பண்டை நூல்களுக்குள்ள பழையவுரைகளைக் கருவி யாகக் கொண்டு காலவாராய்ச்சி செய்வதனால் உண்மை காண் டல் ஒருகாலு மியலாது. அது நேரிய முறையும் அன்றும். அதனாற்றான், ஆராய்ச்சி நெறியிற்றுறை போய நிறையறிஞரும்

அம்முறை மேற்கோடல் தவிர்ந்தொழுகு வாராயினர்; தவிராது முயன்றோரும் முடிவு கண்டிலர்; கண்டுகூறினோர் முடிபும் பின்னர் மறுத்தற் குரித்தாதலன்றி நிறுத்தற் கேலாமை கழிதல் காண்டும். அந்நெறியில் உண்மை துணியக் கூடாவாறு அத்துணை யிடர்ப்பாடுகள் மலிந்துள. நிறைந்த புலமையும் செறிந்த நூற்பயிற்சியும், தெளிந்த தூயமனமும், கூர்த்த மதிநுட்பமும், சீர்த்த செப்பமும் ஒட்பமும் அமைதியும் பிற தகுதியுமுடையராயின் ஒருகால் அந்நெறியிற் சென்று உண்மை காண்டல் கூடலாம்.

II

அங்ஙனமாக, **திரு. E. R. நரசிம்மையங்கார் அவர்கள்,** சில பொருள் பற்றித் தாம் ஆராய்ந்துகண்ட உண்மைகளை, நமது **"பொழில்"** வாயிலாக வெளியிட்டு வருகின்றமை பொழிலன்பர் அறிவர். சென்ற **யுவ, புரட்டாசி, ஐப்பசித்**திங்கள் இதழ்களில், **"உரையாசிரியர் ஒருவர், பேராசிரியர் பலர்"** என்ற தலைப்பின்கீழ், அவ்விருவரேயன்றிப் பிறவுரையாசிரியர்களைப் பற்றியும் விரிவான ஆராய்ச்சிக் கட்டுரை யொன்று அவரான் வெளியிடப் பெற்றிருத்தல் அன்பர் அறிந்ததொன்று. அதன்கண் அவர் உண்மை காணச் செய்திருக்கும் முயற்சி பாராட்டற் பாலதொன்றாயினும், அவர், ஆராய்ச்சிநெறிக்குறிய நேரியமுறையை விடுத்து, நெறியல்லா நெறிமேற் கொண்டு, சிலவற்றை ஏதுவும் எடுத்துக் காட்டும் இன்றியே துணிந்து விதித்தும், சிலவற்றை இயைபில்லாதனவும், கொண்ட கோளைச் சாதித்தற்குப் போதிய வலியில்லனவும், தன்கோளையே மறுக்கத் தக்கனவுமான குற்றம்படத்தக்க ஏதுக்களாற் றுணிந்து நிறுத்தியும் முடிபு கூறியுள்ளனர். ஒருவர் ஒருபொருளின் மெய்ம்மைப் பொய்ம்மை நிலைகளைக் கண்டறிதற்குச் செய்யும் ஆராய்ச்சிக்கண் குற்றமுள்ளன காணப்பெறின், அவை உளவாதற்குரிய ஏதுக்களை இயன்றமட்டில் துருவிக்கண்டு, அவற்றின் வன்மை மென்மைகளைச் சீர்தூக்கி நோக்கி, அவற்றிற்குத்தகக் கொள்ளுவதும் தள்ளுவதும் செய்தற்குரியரேயன்றி, தனக்குக் குற்றமுளதெனத் தோன்றிய வத்துணையானே, ஏது முதலியன

காணாது பிறிதொரு முடிபு வகுத்தற்குரிய ரல்லரென்பதும், அங்ஙனம் வகுப்பரேல் அது பெரும்பாலும் தவறாய் முடிதல் ஒருதலையென்பதும் முதலிய ஆராய்ச்சி விதிகட்குமாறாக, அவர் ஆராய்ச்சி செய்யப் பெற்றுள்ளது. ஆராய்ச்சிநூல்கள் ஒவ்வொன்றும், அவற்றைப் படிப்போரொவ்வொருவரையும் பிற்காலத்தில் மொழிக்கு ஆக்கந் தேடும் தனிப்பெருமகனாக்குதற்கேற்ற முறையில் அமைந்திருத்தல் வேண்டுமாக, அங்ஙனமன்றி, அவ்வாராய்ச்சி, படிப்போர்க்குப் பொய்ப்பொருளை மெய்ப்பொருளாகக் காட்டி மயங்க வைப்பதாக விருத்தலின், அதனைப் படிப்பார், தாம் காண்பனவற்றைக் காணுமாறே கொள்ளாது, தம் உண்மையறிவான் ஓர்ந்துணர்தல் வேண்டி, அவ்வாராய்ச்சி யுரைபற்றி யீண்டுச் சிறிது ஆராயப்பெறுகின்றது.

முதற்கண், உரையாசிரியர் ஒருவரா? இருவரா? என்பது பற்றி ஆராயப்புகுந்த திரு. ஐயங்காரவர்கள், இருவர் என்போரால் ஏதுவாகக் காட்டப்படுவதும், சேனாவரையரால், உரையாசிரியராற் கூறப்பட்டதாகக் கூறி மறுக்கப்பட்டுள்ள பகுதிகளுள் இது போது வெளிவந்துள்ள இளம்பூரணர் உரையிற் காணப்படாதனவற்றுளொன்றுமாகிய "நஞ்சுண்டான் சாம்" என்பது ஒருபாற்குரிய சொல்லாயினும், நஞ்சுண்டாள் சாவள், நஞ்சுண்டார் சாவர், நஞ்சுண்டதுசாம், நஞ்சுண்டனசாம், என ஐம்பாற்கு முரித்தாம் அச்சொல்லென இப்பொருளுணர்த்துகின்றது இச்சூத்திரம் என்றாரால் உரையாசிரியர் எனின்" (தொல். சொல் சே. 161) என்னும் பகுதியைக் காட்டி, இப்பகுதி இளம்பூரணர் உரைப்பதிப்பில் காணப்படவில்லையாயினும் அவராற் கூறப்பட்டதேயென நிறுவுவார்; இம்மறுப்புக் குரியவுரை நேமிநாதவுரையிற் (சொல். 65) காணப்படுகிறது. முற்கூறிய நேமிநாதவுரைகாரர் இளம்பூரண அடிகளுக்கு அணுகிய காலத்திருந்தவராதலினாலும், முந்திய ஆசிரியர் கருத்தையும் உதாரணங்களையும் தழுவுவது உரையாசிரியர்களின் பெருவழக்காதலாலும் 'நஞ்சுண்டான்சாம்' என்னும் உதாரணம் காட்டியவர் இளம்பூரண அடிக

ளாவரெனக்கோடல் அமையும். அடிகள் உரையில் இவ்வுதாரணம் காணப்படாததற்குக் காரணம் எழுத்தாளர் செய்த பிழையாகும்'' என்கின்றனர்.

இதன்கண் திரு. ஐயங்காரவர்கள் காட்டும் ஏது: நேமிநாத வுரையில் **நஞ்சுண்டான்சாம்** என்றவுதாரணம் காட்டப்பட்டிருத்தல். அதனாற் சாதிப்பது: ஆசிரியர் **சேனாவரையரான்** அவ்வுதாரணம் காட்டியவராகக் கூறப்படும் **உரையாசிரியர் இளம்பூரணவடிகளே** யாவரென்பது. இச்சாதன சாத்தியங்கட்குள்ள இயைபு: முந்திய ஆசிரியர்களின் கருத்தையும் உதாரணங்களையும் தழுவுதலாகிய உரையாசிரியர்களின் வழக்கு.

இவர் கொண்ட இவ்வியைபைபற்றி நோக்கின் **இளம்பூரணவடிகட்குக்** காலத்தான் முன்னாக, பின்னாக, **நேமிநாத** வுரைகாரருக்கு முற்பட்டு **உரையாசிரியர்** என்னும் பெயருடையராய்த் **தொல்காப்பியத்திற்கு** உரை வகுத்தாரொருவரிருந்து, அவ்வுதாரணம் அவரான் அவ்வுரைக்கட் காட்டப்பட, அதனை யவ்வழக்குப்பற்றி **நேமிநாத** வுரைகாரர் காட்டுவாராயினா ரென்றலும் எய்துமன்றே. இம்மாறுபாட்டினை யாராயாது **நேமிநாத** வுரைகாரர் காட்டியுள்ளமையின், அஃது **இளம்பூரணராற்** காட்டப்பட்டதேயென்று கோடலும், அதனால் உரையாசிரியர் இளம்பூரணர் இருவரும் ஒருவரேயென்று துணிதலும் நிரம்பாதென்க.

நேமிநாத வுரைகாரருக்கு அணுகிய காலத்தவர் இளம்பூரணவடிகளே யெனின், முதற்கண் அங்ஙனமாதல் நிறுவப்படுதல்வேண்டும். ஏதுவும் எடுத்துக் காட்டுமின்றி நேமிநாத வுரைகாரருக்கு இளம்பூரணவடிகள் அணுகிய காலத்தவரென்றலும், இருவர்க்கு மிடைப்பட்ட காலம் ஐம்பது அறுபதி யாண்டுகட்கு மேற்படாதென்றலும் ஆதாரமற்ற கூற்றுக்களாய் அறிஞரா னொருதலையாகக் கொள்ளப்படா தென்க. ஏனைய ஆராய்ச்சியாளர் கொள்கைப்படி இளம்பூரணர் எட்டு அல்லது ஒன்பதாவது நூற்றாண்டில் வாழ்ந்தவரெனக் கொண்டு, அவருக்கும் பதினோராவது நூற்றாண்டிற்குப் பிற்பட்டவரான நேமிநாத உரைகாரருக்கு மிடையில் **உரையாசிரியரெனப்படுவா**

ரிருந்தாரெனக் கோடலும், அவராற் காட்டப்பட்ட அவ்வுதாரணம் **நேமிநாத** வுரைகாரரான் மேற்கொண்டு காட்டப்பட்டதென்றலும் எய்துவதாய், எவ்வாற்றானும் இவர் காட்டிய ஏது உரையாசிரியர் இளம்பூரணரேயென நிறுவுதற்கேற்ற ஆற்றலுடையதாகாமை காண்க.

பின்னர், அவ்வுதாரணம் இளம்பூரணருரைப் பதிப்பிற் காணப் படாமைக்குக் காரணங் கூறுவார்; அஃது ஏடெழுதியோர் செய்த பிழையென்றும், பழைய உரைகளிற் காணப்படுவன காலத்தால் வீழ்ந்து போதல் உண்டென்றும், கூறி, அங்ஙனம் வீழ்ந்துபோதலுண்டென்பதற்குச் சான்றாக, **"இராவணனுதல் பாயிரச் சூத்திரத்து உரையாசிரியர் உரையானுமுணர்க"** (40-2) என்று **மதுரைக்காஞ்சி** யடிகளுரையில் ஆசிரியர் **நச்சினார்க்கினியர்** கூறியிருத்தலைக் காட்டி, அப்பகுதி இதுபோது வெளிவந்துள்ள இளம்பூரணருரைப் பதிப்பிற் காணப் படவில்லையென்பதையும், அஃது அங்ஙனம் காலத்தால் வீழ்ந்துபட்டதென்பதையும் **குறிப்பாற்** பெறவைத்து, "இராவணனுதல்.... ....உரையானு முணர்க' என்று மதுரைக்காஞ்சியடிகள் உரையில் நச்சினார்க்கினியர் கூறிய பகுதி இளம்பூரணவடிகளையே உரையாசிரியர் என்னும் சிறப்புப்பெயர் கொடுத்துக் கூறினாரென ஒருதலையாகக் கொள்க" என்று கூறுகின்றார்.

ஒன்று குறித்து ஆராயப் புகுவார் முன்னர் ஏதுவும் எடுத்துக்காட்டும் காட்டி விளக்கிப், பின்னர் தங்கோளைச் சாதிப்பதே முறையாக, அவ்வாறன்றி, நச்சினார்க்கினியர், உரையாசிரியர் என்றது இளம்பூரணரையே யென ஒருதலையாகக் கொள்கவெனவிதித்தல், சிறிதும் ஆராய்ச்சியாளர்க்கு அடுப்பதன்றாம். இளம்பூரணரையும் உரையாசிரியரென்றலுண்டென்பதும் இவரான் மறுக்கப்படுவார் கொள்கையாகலின், இந்நச்சினார்க்கினியர் கூற்று இளம்பூரணருரைப்பதிப்பிற் காணப் படுவதாயினும், ஐயங்கார் கூற்றுக்குத் துணைபுரிவதாகாமை யுணர்க. இளம்பூரணரின் வேறாய உரையாசிரியரே தாமியற்றியதொல்காப்பியப் பாயிர வுரைக்கண் அதுகூறினாரென்றும், அதனையே

எடுத்துக்காட்டி, அது கூறினுரையே உரையாசிரிய ரென்பா ராயினர் ஆசிரியர் நச்சினர்க்கினியர் என்றும் கோடல் அமையு மன்றே. அங்ஙனமாக நச்சினர்க்கினியர் உரையாசிரியர் என்றது இளம்பூரணரையே என்று ஒருதலையாற் கொள்வ தியாண்டையதென்க. தான் அது கோடலின், பிறரும் அதுவே கோடல் வேண்டுமென்பது இவர் தம் கருத்துப் போலும்! வேத விதிக்கும் ஏதுவேண்டும் இக்காலத்து இத்தகைய ஏதுவின்றி விதிக்கும்விதி, ஆராய்ச்சிமுடிபாக அறிஞராற் கொள்ளப்படா தென்க.

இனி, "நேமிநாதநூலைச் சின்னூல் என்று புறக்கணித்த பிழையால் உரையாசிரியர் ஒருவரை யிருவராக்கி ஒவ்வாத கூற் றையுரைத்து இடர்ப்பாட்டில் உழலநேர்ந்தது" என்னும் இவர் கூற்று, நேமிநாத நூலைச் சின்னூல் என்று புறக்கணித்தற்கும், உரையாசிரிய ரொருவரை யிருவராகக் கோடற்கும் என்னும் இயைபின்மையான் ஒவ்வாக் கூற்ருயிருத்தலினும், இயை புண்டெனின், அது விளக்கப்படவில்லையாகலானும் இதுபற்றிய வாராய்ச்சி வேண்டுவ தின்றெனவிடுத்தொழிகின்ரும்.

இனி, ஆசிரியர் சேனுவரையர் உரையாசிரியர் கூறியதாகக் கொண்டு மறுத்தபகுதி இளம்பூரணராலேயே கூறப்பட்டுப், பிற்காலத்து ஏடுபெயர்த்து எழுதுவோரான் விடுபட்டதென்றல் பொருந்துமாறு சிறிது நோக்குதும். அப்பகுதியை ஆசிரியர் சேனுவரையர், "இருதிணைப் பிரிந்த வைம்பாற் கிளவிக்கு, முரி யவையுரிய பெயர் வயினுன" (தொல். சொல். சே. 161; இ. 158) என்ற சூத்திரவுரைக்கண் காட்டிமறுக்கின்ரூர். மறுக்கின்றவர், "உணர்த்துகின்றது இச்சூத்திரம் என்ருரால்" என்று கூறுத தலின், அப்பகுதி இச்சூத்திர வுரைக்கண்ணே இளம்பூரணராற் கூறப் பட்டதாதல் வேண்டும். வேண்டவே, அப்பகுதி பிற் காலத்து வீழ்ந்ததாயின் அச்சூத்திரத்தின்கீழ் இதுபோது பதிக்கப் பட்டுள்ள வுரை அப்பகுதியோடு பொருந்துவதாக விருத்தல் வேண்டும்.

'இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவி'யாதற்குப் பெயருள் உரியன உரியவாம் என்றவாறு. அவன், பெண்மகன். சாத்தன்

என னகரவீறு ஆடூவிற்கும், மகடூவிற்கும், அஃறிணை யாண்பாற் கும் உரித்தாய் வருதலானும், அவள், மக்கள், மகள் என ளகார வீறு மகடூவிற்கும் பல்லோர்க்கும், அஃறிணைப் பெண்பாற்கும் உரித்தாய் வருதலானும், பெண்டாட்டி, நம்பி எனவும் ஆடூ மகடூ எனவும் இகரவீறும் ஊகாரவீறும் இருபாற்கும் உரியவாய் வருத லானும், வினைச்சொற் போல இன்னவீறு இன்னபாற் குரித் தெனப் பெயர்ச்சொல் ஈறுபற்றி யுணர்தலாகாமையின், 'உரி யவையுரிய' வென்றார். பிறவு மன்ன'' என்பது 'நஞ்சுண்டான் சாம்' என்னும் பகுதியை மறுத்த சேனாவரையர் இச்சூத்திரத் திற்குக் கூறியுள்ளவுரை.

இனி, "இருதிணைப்பிரிந்த ஐம்பாற் கிளவியாதற்குப் பெயருள் உரியன உரியவாம் என்றவாறு. அவன், பெண்மகன், சாத்தன் என னகாரஈறு ஆடூஉவிற்கும், மகடூஉவிற்கும், அஃறிணை யாண்பாற்கும் உரித்தாய் வருதலானும், அவள், மக்கள், மகள் என ளகார ஈறு மகடூஉவிற்கும், பல்லோர்க்கும், அஃறிணைப் பெண்பாற்கும் உரித்தாய் வருதலானும், பெண்டாட்டி, நம்பி எனவும், ஆடூஉ, மகடூஉ எனவும் வரும் இகாரவீறும் உகாரவீறும் இருபாற்கும் உரியவாய் வருதலானும், வினைச்சொற் போல இன்ன ஈறு இன்னபாற்கு உரித்து என்னப் பெயர்ச்சொல் ஈறு பற்றி யுணர்த்தலாகாமையின், 'உரியவையுரிய' என்றார். பிறவும் அன்ன, "என்பது ஆசிரியர் சேனாவரையரான் மறுக்கப்பட்ட வுரையைக் கூறியவராகக் கொள்ளப்படும் இளம்பூரணர் உரைப் பதிப்பில் அவர் கூறியதாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளவுரை.

இவ்விருவருரையும் ஒப்பித்து நோக்குவார்க்கு இவைபொரு ணெறியால் ஒருசிறிதும் தம்முள் வேறுபாடின்றியொத்திருத்தல் நன்கு புலனாவதொன்று. அங்ஙனம் சேனாவரையரான் மறுக்கப் பட்டவுரைப் பகுதி இளம்பூரணரே கூறியதாயின் அதற்கேற்ப வன்றே இவ்வுரையுமிருத்தல் வேண்டும். அங்ஙனமன்றி அம்மறுப்புப் பகுதியோடு பொருணெறியாற் பெரிதும் வேறு பட்டும், அப்பகுதியைமறுத்த சேனாவரையர் உரையோடு சிறிது வேறுபாடு மின்றி யொத்தும் இருத்தலின் அதுகூறினாரை

இது கூறிய இளம்பூரணரே யென்றல் பொருந்தாக் கூற்றே யாமன்றே.

"....என இப்பொருளுணர்த்துகின்றது இச்சூத்திரம்என்றுரால் உரையாசிரியர்" என்றலின் இப்பகுதி சூத்திரம் நுதலியது கூறியதாதல் பெறப்படும். படவே, இச்சூத்திரம் இப் பொருண்மை நுதலுவதாக நுதலிப் புகுந்தார், அதன்கீழ் அதனோடு முற்றிலும் மாறுபட இங்ஙனம் உரை கூறியிருப்பர்கொல்? எனும் வினவெழுதலறிக. இவ்வினவிற்குத் தக்க விடை கூறி விளக்கலராய் வாளா கூறிச்சேறல் ஆராய்ச்சி முறையன்றும். இங்ஙனம் இவ்வுரையோடு மாறுபட்ட அப்பகுதி இடைக் காலத்து ஏடுபெயர்த் தெழுதுவோரால் விடப்பெற்று வீழ்ந்து போயிற்றென அப்பேருபகாரப் பெரியார்மேற் பழியேற்றிக் கூறுதல்,அவ்விருவருரையினும் போதியபயிற்சியும்ஆராய்ச்சியும் இன்மையையே காட்டுவதாவதேயன்றி, குற்றமில்லார்மேல் குற்றமேறக் கூறிய குற்றத்திற்கும் ஆளாக்குவதாம். இக்காட் டியவுரையை யொருகால் நோக்குவார்க்கும் "நஞ்சுண்டான்சாம்" என்ற உதாரணப்பகுதி ஈண்டு இளம்பூரணராற் காட்டப்பட்ட தென்றலின் பொருந்தாமை இனிது புலனாகற்பாலதொன்றாகும்.

இனி, இதுபோது வெளிவந்துள்ள இளம்பூரண ருரைப் பதிப்பில் இச்சூத்திரத்தின்கீழ்ப் பதிப்பிக்கப் பெற்றுள்ளவுரை இளம்பூரணருரை யன்றென்றும், சேனாவரைய ருரையே இளம் பூரண ருரையென மயங்கித் தவறாக ஏடுகளிற் சேர்க்கப்பட, அதன்படிப் பதிப்பிக்கப்பட்டுளதென்றும் ஒரு சாராரும், சேனா வரையரான் மறுக்கப்பட்ட அப்பகுதி பிறனொருவன் கூற்றாக இளம்பூரணராற் கூறப்பட்டிருந்தது, பிற்காலத்து வீழ்ந் திருத்தல் கூடும் என்று ஒரு சாராரும் கூறுபவாலெனின், அவை திரு. ஐயங்காரவர்களாற் காட்டப்பெறாமையின் அவை பற்றி யீண்டு ஆராய்ச்சியின்றென்க. இதுகாறும் கூறி வந்த வாற்றான், திரு. ஐயங்காரவர்கள், உரையாசிரியர் எனப்படுவார் இளம்பூரணரே என்ற சாத்தியத்திற்குக் காட்டிய சாதனங் களின் பொருத்தமின்மையும், அவற்றாற் சாதிக்கப்பெற்ற சாத் தியத்தின் நிலைபேறின்மையும் ஒருவாறு விளக்கப்பட்டன.

இவ்வாற்றான் உரையாசிரியரும் இளம்பூரணவடிகளும் வேறென்பது எம்கோளென்று துணிவாருளரேல், அன்னார்க்கு அஃது இன்னமும் அறிஞரான் ஆராய்தற்குரியதோரரியபொருளாகலின், அதனை நிறுவுதற்கு எழுந்ததன்று இக்கட்டுரையென்பதையும், திரு. ஐயங்காரவர்களின் ஆராய்ச்சியின் நேர்மையின்மை விளக்குவதொன்றனையே நோக்கமாகக்கொண்டு எழுந்ததென்பதையும் அறிவுறுத்தி, மேற்செல்லுகின்றேம்.

(தொடரும்.)

தமிழ்ச்செய்திகள்.

திருப்பனந்தாள் தமிழ்ப்பரிசு. திருப்பனந்தாள் ஆதீனத் தலைவர் காசிவாசி. உயர்திரு. சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் தமிழ்மொழி வளர்ச்சி கருதி சென்னைப் பல்கலைக்கழகத்தினர் நடத்திவரும் தனித் தமிழ்த்தேர்வில் முதல் வகுப்பில் முதலாவதாகக் தேறும் தமிழ் வித்துவானுக்கு ஆண்டுதோறும் ஒரு ஆயிரம் வெண்பொற்காசுகள் பரிசு வழங்கி வருவது தமிழ்நாடு போற்றத்தகும் அருஞ்செயலாகும்.

இப்பரிசை இந்த ஆண்டில் பெற்ற புலவர் உத்தமபாளையம் உயர்தரக் கல்லூரி தலைமைத் தமிழாசிரியர் திருவாளர். வித்துவான். T. சங்குப்புலவர் அவர்கள் எனவறிந்து மகிழ்கின்றோம்.

27—8—36 தேதியன்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தார் (Vice-Chancellor) திருவாளர். Dr. A. இலக்குமணசுவாமி முதலியார் அவர்கள் தலைமையில் பேர் அறிஞர்கள்

குழுமிய கூட்டத்தில் துணைவேந்தர் அவர்களால் பரிசு வழங்கப் பட்டது. அதுகாலை, தானும் கழகத்தினரும் தமிழ்வளர்ச்சியில் கருத்தூன்றி ஆக்கந்தரும் பணிகளை மேற்கொள்ளவிற்கும் நற் செய்தியை வெளியிட்டனர்.

தமிழ்க் கலைச்சொற்கள் மாநாடு:— திருநெல்வேலி, சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தினரின் நன்முயற்சியால் 21—9—36 தேதியன்று சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மன்றத்தில் உயர்திரு. சுவாமி. விபுலானந்த அடிகளின் சீரிய தலைமையில் கூடியது. திருவாங்கூர் திவான். திருவாளர். Sir. C. P. இராமசுவாமி ஐயரவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்தனர்.

மாநாட்டைத் திறந்து வைத்தகாலை திருவாளர் Sir. C. P. இராமசாமிஐயர் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவில் கவனிக் கத்தக்க சில குறிப்புகள்:— வங்காளி வாலிபர்கள் தமது மொழியை வளர்ப்பதற்கு சில கழகங்கள் நிறுவி அவற்றின் உறுப்பினர்கள் தாய்மொழிச் சொற்களைத் தவிர்த்து அங்கிலச் சொற்களை வழங்கினால் அயற்சொல் ஒன்றிற்கு அணா 2 விழுக் காடு அபராதம் விதித்து தமது மொழியைப் பாதுகாத்து வந்த னர் எனக் கேள்வி யுற்றிருக்கின்றேன். தமது தாய் மொழிப் பற்றினால் வங்கமொழியும், வங்க நாகரிகமும்போற்றி வளர்க்கப் பெற்று இதுபோது வங்கநாடும் வங்கமொழியும் புகழுடன் திகழ்கின்றன. கூர்ச்சரரும், தெலுங்கரும் வங்கநாடினரைப் போலவே தாய் மொழியைப் போற்றுகின்றனர். துருக்கி நாட் டின் முன்னேற்றம் கமால்என்பவரின் மொழித்திருத்தைப்பற்றி யது. துருக்கிநூல் வழக்குகளில் காணப்பெற்றஅரபி, பாரசீகம், ஐரோப்பிய சொற்களைக்களைந்து அகற்றி தனது நாட்டுமொழி களைவழங்கிக் கலைநூல்களைச் செப்பஞ்செய்தனர். துருக்கிமொழி யில் கலைக்களஞ்சியமும் (Encyclopaedia) அகராதியும்(Dictionary) இயற்றினர். சர்மனியரும் தமது மொழியினின்றும் அயற் சொற்களை அகற்றி தமது நாட்டுமொழியில் கலைச் சொற்களைப் படைத்துக்கொண்டனர்.

தமிழரின் நாகரிகம் நமது நாட்டின் எல்லையை யிகந்து குணகுட கடல்களுக்கப்பாலும் பலநாடுகளிலும் பரவியிருந்தது. பிறமொழியினரின் சிறந்த கருத்துக்களைத் தாம் அறிந்துகொள்ளுவதும், அறிந்தவற்றை தமதாக்கிக் கொள்ளுவதும் இவர்களின் சிறந்தபண்புகளாக இருந்தன. கலை நூற் கருத்துக்களை வெளியிடுதற்கு அயன் மொழிகளிலிருந்து கடன் வாங்குவது இன்றியமையாத போது அச்சொற்களை அவ்வுருவத்தில் வழங்காது தமிழ்மொழியின் இயலுடன் இசையமாற்றிவழங்கவேண்டுமென்பதை நினைவிலிருத்தவேண்டும்.

திருவாளர். T. S. நடராச பிள்ளையவர்கள் நிகழ்த்திய வரவேற்பின் குறிப்புகள்:—

தெலுங்கர், கன்னடர், மலையாளர் இவர்களை நோக்கத் தமிழ் மக்கள் தமிழ்மொழி வளர்ச்சியில் ஊக்கங்காட்டவில்லையென்பது கண்கூடு. தமது தாய்மொழியைப் போற்ருதோடமையாது, அயன் மொழிகளைத் தமிழ்நாட்டில் நிலைநிறுத்தவும், வளர்க்கவும் தலைப்படுகின்றனர்.

கலைச்சொற்களை ஆக்குவதில் பல கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன. Cycle, Motorcar முதலிய அங்கிலச்சொற்கள் வழக்கில் இருந்து வருவதால், அவற்றின்பொருளை பாமரரும் எளிதே தெரிந்து கொள்ளுகின்றனர். இவற்றைக் குறிப்பதற்கு தமிழ்ச்சொற் குறியீடுகளை ஆக்குவதானல் அச்சொற்கள் வழக்கில் வரும் வரை பொருள் விளங்குவது கடினமாகும். அதன் பொருட்டு அங்கிலமாதிய அயன்மொழிக் குறியீடுகளை தமிழ்மொழி வழக்கில் பெருக்குதல் நன்ரு? தெலுங்கு, மலையாள மொழிகள் வடமொழிக்கு அடிப்பட்டு தமது உருவும் திருவும் சிதைந் தொழிந்ததை மறக்கவொண்ணுமா?

மாநாட்டின் தலைவர் உயர்திரு. சுவாமி விபுலானந்த அடிகள் நிகழ்த்திய தலைமையுரையின் குறிப்புகள்:—

பண்டைக்காலத்தில் கவின்கலைகள், சிற்பம் ஓவியம், மருத்துவம், இரசாயனம், கணக்கு, கப்பலோட்டம், வாணிகம், ஆதிய பலகலைகள் தமிழ் நாட்டில் செழித்தோங்கின. தமிழ் நூல்களைத் துருவி ஆராய்ந்தால் தமிழ் வழக்கிலுள்ள பல குறியீட்டுச் சொற்கள் நமக்குக் கிடைக்கும். கலைக்கருத்துகளை வெளியிடுதற்கு தனித்தமிழ்ச்சொற்கள் இல்லாவிடில் வடமொழி நூல்களில் பயிலப்படும் வடசொற்களை ஏற்றபடி அமைத்து தமிழில் வழங்கலாம். தமிழ் வழக்கில் இருந்துவரும் அயன் மொழிகளைத் தமிழர் வழங்கத் தலைப்பட்டமையால் செவ்விய தமிழ்ச் சொற்கள் பல வழக்காறற்றன. உ-ம்: மறைக்காடு: வேதாரணியம்: வெண்காடு: சுவேதாரணியம். இடுகுறிச் சொற்கள் நீங்க, பொருள்குறிக்கும் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களைப் படைப்பது மிகவும் எளிது.

மாநாட்டினர் ஒவ்வொரு கலைக்கும் உரிய குறியீட்டுச் சொற்களை ஆராய்ந்து தேர்தற்கென அவ்வக் கலைவல்லார் சிற்சிலர் கூடிய உட்கழகங்களை அமைத்து ஆராய்ச்சி முடிபுகளைத் தெரிக்குமாறு விடுத்திருக்கின்றனர்.

உ

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

கல்லூரிக்கு அன்பர்கள் உதவிய "ஆவணி" நன்கொடை

திங்கள் நன்கொடை		ரூ.	அ.	ப.
திரு. சித்த வைத்திய சரபம் Dr. ஆ. சோதிபாண்டியன்	அவர்கள்	5	0	0
,, க. நடராசன் B.A., B.L.,	,,	5	0	0
,, ரே. அ. அனந்தவிசய முதலியார்	,,	1	8	0
ஆண்டு நன்கொடை				
,, N. L. வேங்கடசாமி நாயுடு கரந்தை.	,,	35	0	0
,, T. S. நாராயணசாமி அய்யர் (Retired P. W. D. Overseer).	,,	5	0	0

மருத்துவசாலைக்குதவிய அன்பர்கள்.

திருவாளர்.		ரூ.	அ.	ப.
,, S. முத்துசாமி ஐயர் அவர்கள்	பெருந்தோட்டம்	2	0	0
,, R. கோதண்டராமய்யர் அவர்கள்	,,	2	0	0
,, T. R. சுப்பிரமணிய ஐயர் ,,	திருவெண்காடு	5	0	0
,, தலைமையாசிரியர் க. த. ச. கல்லூரி	தஞ்சை	20	0	0
,, இராவ்சாகிபு த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள்		25	0	0
,, V. துரைசாமிப் பிள்ளை அவர்கள்	திருக்காட்டுப்பள்ளி	2	0	0